1972 ஆகஸ்ட் 21]

இருக்கிறது. அர்ச்சகர்களை விசாரித்துப் பார்த்தோம். எந்தவித மான சிலையும் திருட்டுப் போகவில்லை என்று அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : திருட்டுப் போன சிலைகள் போலீஸ் நிலையத்தில் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற பத்திரிகைச் செய்தியை முதலமைச்சருக்குத் தெரிவித்தேன். அது மட்டுமல்ல, விசாரணை செய்து, நடவடிக்கை எடுத்து, சிலைகள் ஒரு இடத்தில் இருப்பதையும் கண்டுபிடித்தார்கள். இதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட செய்தியில் எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. இருந்தாலும் அவர்கள் மேலும் சொல்லுகிற காரணத்தால், இதைப் பற்றி விசாரிக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : கோவிலாகவும் இருக்கலாம், புதை பொருளாகவும் இருக்கலாம். அதுபற்றிய விவரமில்லை.

*168. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a number of stolen idols were recovered in Tuticorin about 23rd January 1972;

(*b*) if so, the details of the (i) idols recovered and (ii) their value; and

(*c*) the steps taken to trace the persons responsible for these thefts?

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருடுபோன கடவுளர் சிலைகள் பல 1972-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் நாள் அளவில் தூத்துக்குடியில் மீட்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், (1) கடவுளர் சிலைகள் (2) அவற்றின் விலை மதிப்பு குறித்த விவரங்கள் யாவை ?

(உ) இந்தத் திருட்டுகளுக்குப் பொறுப்பாளிகளைக் கண்டு பிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) & (உ) வினுக்களுக்கு இடமில்லை.

Immovable Properties possessed by the Major Religious Institutions

* 169 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total value of the immovable properties possessed by the Major Religious Institutions under the control of the Hindu Religious and Charitable Endowments Department in Tirunelveli, Ramanathapuram and Kanyakumari districts?

பெரிய சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான இயங்காச் சொத்துக்கள்.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்து சமய அறக்கட்டளைகள் துறையின் அதிகார வரம்பிற்குள் உள்ள பெரிய சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான இயங்காச் சொத்துக்களின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ரூ. 2,30,43,573 (ரூபாய் இரண்டு கோடியே முப்பது லட்சத்து, நாற்பத்து மூன்ருயிரத்து ஐந்நூற்று எழுபத்துமூன்று மட்டும்).

Temple Cars

* 170 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken to keep the temple cars in good condition?

கோவில் தேர்கள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோவில் தேர்களை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS